


**10.07.2024**

**தலைப்புச் செய்திகள்**

1. **இந்தியா - ஆஸ்திரிய நாடுகளின் நட்புறவு வரும் காலங்களில்** மேலும் வலுப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. **ரயில்வே துறையில் 18 ஆயிரம் ரயில் பெட்டி பணியாளர்களை** பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. **தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கான** கலந்தாய்வு வரும் 22-ம் தேதி தொடங்குகிறது.

4. **விக்ரவாண்டி சட்டபேரவை தொகுதி இடைத் தேர்தலில் பகல்** ஒருமணி நிலவரப்படி 51 சதவிகித வாக்குகள் பதிவாயின.

5. **இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான** 3-வது 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்று நடைபெறுகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖❖

**பிரதமர் ஆஸ்திரியா**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது 3 நாள்** அரசுமுறை பயணத்தின் 2-வது கட்டமாக ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் அந்நாட்டின் தலைவர் கார்ல் நெஹ்மர்-ஐ இன்று சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இந்தியா - ஆஸ்திரியா நாடுகளின் நட்புறவு வரும் காலங்களில் மேலும் வலுப்படும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர், தமக்கு சிறப்பான வரவேற்பு அளித்தமைக்காக
திரு. நெஹ்மருக்கு சமுக வலைளத்தில் நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஆஸ்திரிய தலைவர்களுடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாகவும், இருநாடுகளும் இணைந்து எதிர்கால சர்வதேச நலனிற்காக தொடர்ந்து பணியாற்றும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஆஸ்திரிய வருகை குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள திரு. நெஹ்மர், இந்தியாவும் - ஆஸ்திரியாவும் நீண்டகால நட்புறவு நாடுகள் என்று குறிப்பிட்டார்.

திரு.நரேந்திரமோடியுடன் அரசியல் பொருளாதார ஆலோசனைகள் குறித்த பேச்சுவார்த்தைகளை எதிர்நோக்கி இருப்பதாக குறிப்பிட்டார்.

படைப்பாற்றல் திறன், தொழில்நுட்ப மேம்பாடு, நீடித்த வளர்ச்சி உள்ளிட்ட பிரிவுகளில் ஆஸ்திரியா நாட்டுடன் பிரதமர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்

அந்நாட்டின் தொழிலதிபர்களை சந்தித்து பேசவுள்ள பிரதமர், பரஸ்பர வர்த்தகம் முதலீடுகள் உள்ளிட்ட பிரிவுகளில் வாய்ப்புகள் குறித்து விரிவாக ஆலோசிக்கிறார்.

அந்நாட்டின் வெளிநாடுவாழ் இந்தியர்களுடன் பிரதமர் திரு. நரேந்திரமோடி கலந்துரையாட உள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமரின் ஸ்வாநிதி, விஸ்வகர்மா, ஜன்சமர்த்** வலைதள கட்டமைப்பு திட்டங்களின் கீழ் ஏழை எளிய கலைஞர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு கூடுதல் கடன் வழங்க மத்திய நிதியமைச்சகம் தனியார் வங்கிகளை வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் மத்திய நிதி சேவை துறை செயலர் திரு. விவேக் ஜோஷி தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் ஜன்சமர்த் வலைதள முகப்பின் மூலம் ஒரே தளத்தின் கீழ் 13 கடன் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப் படுவதை சுட்டிக்காட்டினார்

இந்த கடனுதவி திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிதி முகாம்களை நடத்தி சமூகத்தின் பல்வேறு தரப்பினர் பயனடைய வங்கிகள் வாய்ப்பு ஏற்படுத்தி தரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

**அஸ்வினி வைஷ்ணவ்**

**ரயில்வே பணியாளர்கள் ஒன்றிணைந்து நாட்டிற்கு** சேவையாற்றுவதாக, இத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வின் வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் 34 ஆயிரம் ரயில் பெட்டி பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டதாகவும், மேலும், 18 ஆயிரம் பேரை பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

ரயில்வே நிர்வாகம் குறித்து எதிர்கட்சிகள் தவறான தகவல்களை தெரிவிப்பதாக குறை கூறிய அவர், ரயில்வே பணியாளர்கள் ஒரே குடும்பமாக செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

**லக்ஷயா 2024**

பெங்களூருவில் இந்திய வர்த்தக, மேலாண்மை கல்வி நிறுவனத்தின் சார்பில் பாதுகாப்பு மற்றும் தொழில் நிறுவனங்கள் இடையே இணைப்பை வலுப்படுத்துவதற்கான **லக்ஷயா 2024** நிகழ்வு வரும் 14-ம் தேதி நடைபெறுகிறது.

பன்முகத்தன்மை, எதிர்கால பணிகள் என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 50-க்கும் மேற்பட்ட பாதுகாப்பு மற்றும் தொழில் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

பாதுகாப்பு தொடர்பான கருத்துக்களை பரிமாற இந்த தளம் பயனளிப்பதோடு, செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைப்பு குறித்தும் இதில் விவாதிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**விபத்து**

உத்தர பிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டத்தில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

19 பேர் காயமடைந்துள்ளனர்.

2 அடுக்கு பேருந்தும், டாங்கர் லாரியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டது.

விபத்தில் பேருந்து இரண்டாக உடைந்து சேதமடைந்தது.

இப்பகுதியில் மீட்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இந்த சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

**உச்சநீதிமன்றம்**

**இஸ்லாமிய பெண்கள் அரசியல்** பிரிவு 125-ன் கீழ், கணவரிடமிருந்து ஜீவனாம்ச பராமரிப்பு தொகை பெற தகுதியுடையவர்கள் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இடைக்கால பராமரிப்புத்தொகை வழங்குவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி **B.V.** நாகரெத்னா தலைமையிலான அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**தரவரிசை பட்டியல்**

**தமிழகத்தில் B.E., B.Tech., உள்ளிட்ட பொறியியல்** படிப்பு மாணாக்கர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியலை மாநில தொழில்நுட்ப கல்வி இயக்குநரக ஆணையர் திரு.வீரராகவராவ் இன்றுகாலை வெளியிட்டார்.

பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வு வரும் 22-ம் தேதி தொடங்கி செப்டம்பர் 11-ம் தேதிவரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.5 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மற்றும் விளையாட்டு பிரிவினருக்கான கலந்தாய்வு வரும் 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறும்.

பொது பிரிவினருக்கான கலந்தாய்வு வரும் 29ம் தேதிமுதல் அடுத்தமாதம் 3-ம் தேதிவரை நடைபெறும்.

இதனிடையே துணை கலந்தாய்வு இணையவழியில் அடுத்தமாதம் 6-ம் தேதி தொடங்குகிறது.

தரவரிசை பட்டியலில் செங்கல்பட்டு மாணவி தோஷிதா முதலிடத்தையும்,

திருநெல்வேலியை சேர்ந்த நிலஞ்சனா 2-ம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

நாமக்கல்லை சேர்ந்த கோகுல் 3-ம் இடத்தை பிடித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

## முனைவர் பட்ட மேற்படிப்பு

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில்** 2024-25ம் ஆண்டிற்கான முதுநிலை மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பு சேர்க்கை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இளநிலை பட்டப்படிப்பை முடிக்கும் மாணாக்கரிடமிருந்து விண்ணப்பங்களை பெறுவதில் ஏற்பட்ட நடைமுறை சிக்கலை தவிர்க்கும் விதமாக கடந்த மே மாதம் தொடங்கப்பட்ட முதுநிலை மாணாக்கர் சேர்க்கை ரத்து செய்யப்படுவதாக பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

விண்ணபித்த மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணங்கள் அவரவர் வங்கி கணக்குகளுக்கு திருப்பி செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்புகள் செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்படும் என்றும் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

## இடைத்தேர்தல்

**தமிழ்நாட்டில் விக்ரவாண்டி** சட்டபேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெறுகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி 51 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

விக்ரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி உடல்நலக்குறைவு காரணமாக காலமானதால் இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது

தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட 11 கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் என மொத்தம் 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

வாக்குப்பதிவு குறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

வாக்குப்பதிவு மையங்களில் இணையவழி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்கு வங்கத்தில் 4 தொகுதிகளிலும்,

ஹிமாச்சல பிரதேசத்தில் 3, உத்ரகாண்டில் 2,

பீஹார், மத்திய பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு சட்டப்பேரவை தொகுதியிலும் இடைத்தேர்தல் இன்று நடைபெறுகிறது. இடைத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 13-ம் தேதி எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

**காந்தி**

**ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா நகராட்சி** பகுதியில் மத்திய அரசின் நிதி மூலம் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளை மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி இன்று துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

**நகராட்சி நிர்வாகத்துறை**

**நகராட்சி நிர்வாகத்துறையின் புதுமையான** திட்டங்களினால் நகரமயமாக்கலில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்வதாக மாநில அரசின் செய்திகுறிப்பு தெரிவிக்கிறது.

தூய்மை கணக்கெடுப்பு மாநில தரவரிசை பட்டியலில் 22-வது இடத்தில் இருந்து 10-வது இடத்திற்கு தமிழ்நாடு முன்னேறியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**விழுப்புரம் கோட்டத்திற்கு** உட்பட்ட இடங்களுக்கு இலவச பயணச்சலுகை பெற விரும்பும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் வரும் 18-ம் தேதி மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**மயிலாடுதுறை மாவட்டத்தில் தொழில்** முனைவோருக்கு 25 சதவிகித அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட உள்ளதாக ஆட்சித் தலைவர் திரு. மகாபாரதி தெரிவித்துள்ளார்.

8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 45 வயது வரையிலான பொதுப்பிரிவினரும், 55 வயது வரையிலான சிறப்பு பிரிவினரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

**திருப்பூரில் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 51** ஊராட்சிகளில் தொழில்தொடங்க விரும்பும் வேளாண் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என ஆட்சித்தலைவர் திரு. கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

**நீலகிரி வாய்ஸ்**

நீலகிரி மாவட்டத்தில் விளையும் மலை காய்கறிகள் கூடுதல் விலைக்கு விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖❖❖❖

**யானை**

தேக்கடி, தலைமதகு பகுதியில் உள்ள முல்லை பெரியாறு அணை கால்வாயில் சிக்கிய காட்டு யானையை நீர்வளத்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் இணைந்து பாதுகாப்பா மீட்டுள்ளனர்

இதுகுறித்து எமது செய்தியாளர்

❖❖❖❖❖❖❖❖❖

**தண்ணீர் திறப்பு**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் கெளவரப்பள்ளி அணையிலிருந்து பாசனத்திற்கான நீரை ஆட்சித் தலைவர் திருமதி. சரயு இன்று திறந்துவைத்தார்.

வலது மற்றும் இடதுபுற கால்வாய்கள் வழியாக வினாடிக்கு 88 கனஅடி வீதம் 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஓசூர், மார்த்தாண்டப்பள்ளி உள்ளிட்ட 22 ஊராட்சிகளில் உள்ள 8 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

❖❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

மேற்குதிசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் அடுத்த 6 நாட்களுக்கு பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோர பகுதிகள், வங்க கடல், அரபிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இதற்குட்பட்ட பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான** 3-வது 20-20 கிரிக்கெட் போட்டி ஹராரேயில் இன்றுமாலை நான்கரை மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒருபோட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

4-வது போட்டி வரும் 13ஆம் தேதியும்,

5-வது இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி வரும் 14ஆம் தேதியும் நடைபெற உள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில்** இந்தியாவின் தக்'னேஷ்'வர் சுரேஷ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் 6 - 3, 6 - 4 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் வாயவெரடி ளுரமளஅசயசெ- ஐ வென்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

❖❖❖❖❖❖❖❖❖